# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :26 April 2025*
கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005,
Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின் பிற உரை நுட்பங்கள்**
**முனைவர்.வி.சேகர்**

**தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்**
**கு.செந்தமிழ்செல்வி**

**எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்**
**ஆ.கவிதா**

**சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு**
**மா.மகேஸ்வரி**

**சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு**
**ப. நந்தினி**

**களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்**
**திருமதி.கோ.சரண்யா**

**புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணர்த்தும் போர்**
**ப.சிவாஜி**

**பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்**
**இரா.தீபலெட்சுமி**

**பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி**
**இரா.ஹேமலதா**

**சிலம்பில் அரசியல்**
**மு.உமாமகேஸ்வரி**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

நன்றி

# அகத்தினுள்


**திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்**
முனைவர் ச.வைத்தீஸ்வரன்

**திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்**
முனைவர் ஹ.விஜயலட்சுமி

**பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்**
ப.பிரபு

**திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்**
சா.ஜனார்த்தனன்

**சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்**
திருமதி நா.நித்யா

**நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்**
கி. ராஜ்குமார்

**தர்காவும் விளிம்புநிலை மக்களும்**
முனைவர் மௌ.அஸ்கர் அலி

**இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்**
முனைவர் நா. ஜிதேந்திரன்

**சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு**
ரா.சந்தியா

**ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'**
ரா.ஹேமா சிவகா

**கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்**
இரா.கலாவதி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்**
ந.மஞ்சுளா

**மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்**
பத்மினி. S

**EASY LEARNING TECHNIQUES**
PROF. Dr. Er. S. HARI PRASAD

**Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools**
Kanapathipillai Gnanaretnam

**A Comparative Study Of Formal And Non-formal Education Systems**
Shiyani Thevaruban

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2



**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**



**The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu**
P.PRAVEENKUMAR

**Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums**
Dr. S.Udhaya Kumar.

**தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்**
முனைவர் செ. சாந்தி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்

# *Vaiguntha Worship Methods in the Chitrilakkiyangal*

**கட்டுரையாளர்**

*திருமதி நா.நித்யா,முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர்,பதிவு எண்: BDU2020632778753*

*ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி)*

*பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது*

*திருவானைக்கோவில், திருச்சி — 05, தமிழ்நாடு,இந்தியா*

*N.Nithya, Research Scholar of Tamil. Reg.No.BDU2020632778753,*

*Srimad Andavan Arts & Science College,Affliated to Bharathidasan University, Trichy,Tamilnadu*

**நெறியாளர்**

*முனைவர் சீ.சுஜாதா,உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது*

*திருவானைக்கோவில், திருச்சி — 05,தமிழ்நாடு,இந்தியா*

*Dr.S.Sujatha Assistant Professor,Department of Tamil, Srimad Andavan Arts & Science College,Affliated to Bharathidasan University, Trichy,Tamilnadu*

***Abstract***

*Tamil literatures are the ancient literatures and also one of the world's greatest literatures, for more than two thousand years back. Sittrilakkiyam are helps to know the history of Tamil Nadu in a broad way. This literature tells about Fundamental morals in life of ancient Tamilans like Sangam Literature. Tamil literature largely*

*focuses on divine worship. Rituals has different stages depending on the period of time. Man believes that God is the ultimate cause of all his activities. And worship refines man's inner Heart also. The world is controlled by a supern*

*atural iternal power. so man tries to realize that power through worship.*

***Keywords:*** *Sitrilakkiyam, Divine, Vainava Literature, Azhwar, kattuvichi, Araiyar sevai.*

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழிலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பழமைத் தன்மைக்கொண்ட உலகின் தலை சிறந்த இலக்கியமாகும். அவற்றுள் தமிழக வரலாற்றை பரந்துபட்ட நிலையில் அறிய உதவுவன சிற்றிலக்கியங்கள்.பெயரளவில் இல்லாமல் பேரிலக்கியங்களுக்கு இணையாக பண்டைய தமிழர்களின் வாழ்வியல் நெறிகளை இவை எடுத்தியம்புகின்றன. தமிழிலக்கியங்கள் பெருமளவில் இறை வழிபாட்டிற்கு முக்கியத்துவம் பயப்பன. காலமாற்றத்திற்கேற்ப வழிபாட்டு முறைகள் பல்வேறு படிநிலைகளை கொண்டுள்ளன. மனிதன் தன் அனைத்து செயல்பாடுகளுக்கும் முழுமுதற் காரணமாக இறைவன் விளங்குவதை உளமாற நம்புகிறான்.மேலும் வழிபாடு மனிதனின் அகத்தை செம்மைப்படுத்துவதாக அமைகிறது. உலகம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. அந்த சக்தியை வழிபாட்டின் மூலம் மனிதன் உணரமுற்படுகிறான்.

**திறவுச்சொற்கள்:** சிற்றிலக்கியம், வழிபாடு, வைணவ இலக்கியம், ஆழ்வார்கள், கட்டுவிச்சி, அரையர் சேவை.

**முன்னுரை**

மானுட உலகில் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் தம் விருப்பத்திற்கேற்ப தங்கள் சமய இறைவனை, பல்வேறு மரபுகளைத் தம்மகத்தே கொண்டு வழிபட்டு வருகின்றனர். இந்து சமயமும், இறை வழிபாடும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டது என்பதைச் சங்க காலம் முதல் இன்றைய காலம் வரை நிகழும் இறை விழாக்கள் மூலம் அறியலாம். இல்லங்களில்

செய்யப்பெறுவது ஆத்மார்த்த வழிபாடு, திருக்கோயில்களில் நிகழ்த்தப்பெறுவது பரமார்த்த வழிபாடு. இவ்விரண்டிலும் பல்வேறு வழிபாட்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன. பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வில் சடங்குகளும், தெய்வ வழிபாடுகளும் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. சிற்றிலக்கியங்களின் வழி பரமபத வழிபாட்டின் போது நிகழ்த்தப்பெறும் சடங்கு முறைகளை ஆராய்வதாக இக் கட்டுரை அமைகிறது.

**வழிபாடு பொருள் விளக்கம்**

மனிதனின் நாகரிக வளர்ச்சியின் முதல் வழக்கமாகவும், முக்கிய படிநிலையாகவும் இருந்து வருவது வழிபாடாகும். தனித்த மக்களை ஒன்று படுத்தி சமய ஒற்றுமைக்கு வழிவகுப்பது குழு வழிபாடாகும். **”மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதிலும் அச் சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களாகும்”** எனும் டாக்டர் சு.சக்திவேல் அவர்களின் கூற்று வழிபாட்டிற்கு வலுசேர்க்கும் விதமாக உள்ளது.

**”வழிபாடு' எனும் சொல் 'வழிபடு' என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். வழி என்ற சொல்லிற்கு 'இறைப்பேற்றிற்குரிய' என்றும், பாடு என்பதற்கு அடைவதற்குரிய செயல்முறைகள் என்றும் பொருள் கொண்டு, ”இறைப்பேற்றிற்குரிய வழியை அடைவதற்கு மனிதன் மேற்கொள்ளும் செயல்முறைகளே வழிபாடு” (தமிழ்ப் பண்பாட்டு வரலாறு — ப.635).**

எனப் பொருள்கூறுகிறது தமிழ் அகராதி. மேலும் இச்சொல்லிற்கு தமிழ்ப் பேரகராதி 'வழியிற் செல்லுகை', 'பின்பற்றுகை', 'வணக்கம்', 'வழக்கம்', 'சமயக் கோட்பாடு' போன்ற பொருள்களைத் தருகின்றன.

**”பூசையின் படிநிலைகளைப் பக்தி (மனதைப் பதித்தல்) தியானம் (அக வழிபாடு) யாகம் (கடினமான வழிபாடு), தவம்(முற்றும் துறந்த நிலை கடினமான அகப்புற வழிபாடு)**

**ஆகியவை அடங்கின. இதன் வளர்ச்சியின் முதல் நிலையில் யோகியும், முற்றிய நிலையில் ஞானியும் வழி நடத்தினர்.”**

**(தமிழக வரலாறு பண்பாடு ப.69.)**

வழிபாடு என்பது பக்தனுக்கும், அவன் விரும்பி தொழுகின்ற தெய்வத்திற்கும் இடையே உள்ள அந்தரங்க ஒப்பந்தம், இது மௌனத்தை மொழியாக உடைய தியானமாயிருக்கலாம் அல்லது அவன் பாரம்பரியக் கலாச்சாரத்தின் வெளிப்பாடாகி இதயத்துடன் இணைந்து உறவாடும் தாய்மொழியாக இருக்கலாம்.

மேற்கண்ட கூற்றுகளை நோக்கும்போது வழிபாடு என்பது மக்கள் வாழ்வில் இன்றியமையாத இடத்தினைப் பெற்றுள்ளதை அறியமுடிகின்றது. வழிபாடு ஆன்மாவை அமைதிபடுத்தும் ஓர் வழிமுறை எனலாம்.

**பரமபத வழிபாடு**

வைணவத் திருத்தலங்களில் கொண்டாடப்படும் மிகச்சிறப்பான வழிபாடு பரமபத வாசல் திறப்பாகும். பரம் என்பது பரமன், பரந்தாமன், எனும் திருப்பெயரைக் குறிக்கும். பதம் என்பது இறைவனின் திருவடி. இறைவனின் திருவடியைக் காண்பதற்காகத் திறக்கப்படுவதால் பரமபத வாசல் என்றானது. ஏகாதசி நாளில் பரமபத வாசல் திறக்கப்படும். பௌர்ணமியில் இருந்து வருகிற பதினோராம் நாள், மற்றும் அமாவாசையில் இருந்து வருகிற பதினோராம் நாள் ஏகாதசி ஆகும். ஏகம் என்றால் ஒன்று, தசம் என்றால் பத்து. ஆக ஏகாதசி என்பது பதினொன்று எனும் எண்ணைக் குறிக்கிறது. மோட்சம் தரும் ஏகாதசி வைகுண்ட ஏகாதசி ஆகும்.இதனை '**நித்திய ஏகாதசி**' என்று கூறுவார்கள். மனிதர்களின் ஓராண்டு கால அளவு, தேவர்களுக்கு ஒரு நாள் கணக்காகும். அதன்படி மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்காலை நேரம் ஆகும்.இக்காலம் திருமால் அறிதுயிலில் இருந்து விழித்தெழும் மாதம். ஆகவேதான் இந்த மாதத்தில் வரும் ஏகாதசி தனிச்சிறப்பு பெறுகிறது.

**”பொங்குஅரவு என்பது மெல் அணை; ஊர்திவெம் புள் அரசு**

***பங்கய மின்னொடு பார்மகள் தேவி; படைப்பவன் சேய்***

***கிங்கிரர், விண்ணவர், சாதக நாடு இறை — கேடில் ஒன்றாய்***

***அம்கண் நெடும்புரவி எல்லாம் இடந்த அரங்கருக்கே"*** *(திருவரங்கத்துமாலை — பா.எண் — 78)*

*என வைகுந்தத்தில் திருமாலுடன் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் மற்றும் நில மகள், படைப்புத் தொழிலையுடைய பிரம்மன், தேவர்கள் ஆகியோர் வாசம் செய்வதாக பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் குறிப்பிடுகிறார். மேலும் பரமபதம் '**சாதக நாடு**' என்ற பெயரால் வழங்கப்பட்டதையும் அவரது பாசுரத்தால் அறியமுடிகிறது.*

**பகல் பத்து உற்சவம்**

*மார்கழி மாதம் அமாவாசை தொடங்கி முதல் பத்து நாள்கள் நடைபெறுவது பகல் பத்து வைபவமாகும்.இந்த பகல் பத்தில் ஒன்பது நாள்களிலும் பெருமாள் அருச்சுன மண்டபத்தில் எழுந்தருளுகிறார். ஆழ்வார்கள் பெருமாளுக்கு எதிரே எழுந்தருளுகிறார்கள்.அப்போது அரையர்கள் திருப்பல்லாண்டு தொடங்கி, திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழி வரை உள்ள பாசுரங்களை அபிநயத்துடன் பாடுகிறார்கள். பின்னர் ஆழ்வார்கள் அங்கிருந்து சென்றுவிடுவார்கள். பத்தாம் திருநாளில் பெருமாளுக்கு நாச்சியார் திருக்கோலம் சூட்டப்படுகிறது.*

***"ஸ்ரீரங்கத்தில் மட்டும் பகல்பத்தின் நான்காம் நாள் பிற்பகலில் கம்சவதையும், ஏழாம் நாள் பிற்பகலில் வாமனக்கதையும், எட்டாம் நாள் பிற்பலில் பாற்கடல் கடைந்த நிகழ்ச்சியும், பத்தாம் நாளின் பிற்பகலில் இராவண வதையும் அரையரால் நாடகங்களாக அபிநயங்களின் வழி நடித்துக்காட்டப்படும் மரபு உள்ளது." (அரையர்சேவை-ப.எண்-19-20)***

நம்பெருமாள் பகல் பத்து நாட்களில் காலை புறப்பாட்டின்போது சிங்கத்தைப் போல் மூலஸ்தானத்திலிருந்து வருவார். இதற்கு சிம்ம கதி என்று பெயர்.அதேபோல் இரவு மூலஸ்தானத்திற்கு செல்லும்போது மெதுவாக பாம்பைப் போல் வளைந்து நெளிந்து உள்ளே செல்வார். அதற்கு சர்ப்ப கதி என்றுபெயர்.

**முத்துக்குறி**

அரையர் சேவையின் ஓர் அங்கம் முத்துக்குறி ஆகும். அரையர் சேவை நடைபெறுகையில் பாசுரத்திற்கு மட்டும் அபிநயம் காட்டி, அப்பாசுரத்தை பண்ணுடன் பாடி அதற்கு விளக்கம் சொல்வது மரபு.இதற்கு மாறாக முத்துக்குறி நடைபெறும் நாளில் பாசுரத்திற்கு மட்டுமின்றி உரைப்பகுதிகளில் சில பகுதிகளுக்கும், இசையும், அபிநயமும் நடத்தப்பெறும்.இந்நிகழ்ச்சியில் அரையர் தம்மைக் குறத்தியாக அதாவது கட்டுவிச்சியாகக் கொண்டு குறிபார்த்து தலைவிக்கு நோய் செய்தவன் யார் என்பதையும் கூறுகிறார்.முத்துக்களைக் கொண்டு குறிபார்த்துச் சொல்வதால் இந்நிகழ்ச்சிக்கு முத்துக்குறி என்று பெயர் வந்தது என்பர். **”முத்துக்குறி நிகழ்ச்சி மார்கழி மாத அத்யயன விழாவில் பகல் பத்தின் இறுதி நாளன்று ஆழ்வார் திருநகரியில் நடைபெறுகிறது.திருவரங்கத்தில் பகல்பத்தின் ஒன்பதாம் நாளில் நடைபெறுகிறது.ஸ்ரீவில்லிப்புத்தூரில் மட்டும் ஆண்டில் மூன்றுமுறை முத்துக்குறி நிகழ்த்தப்பெறுகிறது.” (அரையர்சேவை-ப.எண்-40)**

என இந்நிகழ்ச்சிக் குறித்து குறிப்புக் காணப்படுகிறது.

**கட்டுவிச்சியின் பேச்சு**

தோளின் மேலும், தன் மார்பின் மேலும், சுடர் முடி மேலும் தாளினை மேலும் புனைந்த தண்ணந்துழாயுடைய மார்பனான எம்பெருமானை அபிநயித்துக் காட்டிய குறத்தி அதற்கு மேலும் சில வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினாள். பின்பு தோழிகளையும், தாய்மார்களையும் பார்த்து அன்னைமார்கள் இத் தலைவியின் நோவுக்குக் காரணம் எவையோ என்று அஞ்ச வேண்டா.வேற்றுத் தெய்வங்களின் தீண்டுதல் இப்பரகால நாயகிக்கு

ஏற்படவில்லை.நீங்களும் அச்சப்படத் தேவையில்லை என்றாள். இம்மகள் நோவுப்பட்ட அளவில் நீங்கள் உங்களையே மறந்து விட்டீர்களே! உங்கள் வயிற்றில் பிறந்த இப் பெண்பிள்ளையைக் கீழான தெய்வங்கள் நோவு படுத்த முடியுமா? நும் மகளை நோய் படுத்தியவன் யார்?என்பதை அறிந்தேன்.

இக் கட்டுவிச்சி இத்தலைவிக்கு நோய் செய்த தெய்வம் இன்னது என்று அறிந்தாளாகில் இவள் எந்த தெய்வத்தின் பெயரைக் கூறப்போகிறாளோ?என்று நினைத்தனர், பின்னர் தலைவியின் உறவினர் யாவரும் கட்டுவிச்சியைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தனர்.அப்பொழுது அவள் திருமாலின் அவதாரச் சிறப்புகளையும் கூறத் தொடங்குகிறாள்.

இவ்வாறு சிறிய திருமடலில் கட்டுவிச்சியின் பங்கு குறித்து காணப்படுகிறது.மகளின் நிலையைத் தாய் எடுத்துரைக்கும் இடத்திலும் மகளைப் பெருமாளின் முன் இட்டு புலம்பும் இடத்திலும் அரையர் தம்மைத் தாயாகப் பாவித்து நடித்துக் காட்டுகிறார். தம் கையில் உள்ள பட்டுத்துண்டில் சிறு முடிச்சிட்டு அதை தம் பெண்ணாக (தலைவியாக) பாவித்து ஒரு கையில் பிடித்து மறுகையால் அதை காட்டிக் காட்டிப் புலம்புவதாக அமையும்.

திருமாலின் அருளைப் பெற்றவர்கள் ஆழ்வார்கள்.ஆழ்வாரின் பாசுரத்தை அபிநயம் பிடித்து அருள்பெற்றவர்கள் அரையர்கள்.அரையர்களின் அபிநயத்தைக் கண்டு இன்றளவும் அருள்பெறுபவர்கள் அடியவர்கள் என்ற கருத்து ஏற்புடையதாக உள்ளதை அறியமுடிகிறது. மக்களின் பழக்க வழக்கம், பன்பாட்டு மரபுகள், நம்பிக்கைகள் ஆகியவை சிதைவுறாமல் அடுத்த தலைமுறையினரும் அறியும் வண்ணம் இச் சடங்கு முறைகள் இன்றளவும் கொண்டாடப்படுவது பெருமைக்குரியதாகும்.

**”கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் கலையாக விளங்குகிறது.” (அரையர்சேவை-ப.எண்-58)**

என இந் நிகழ்ச்சிக் குறித்து டாக்டர் சு.வேங்கடராமன் கூறுவது பொருத்தமுடையதாக விளங்குகிறது.

**பள்ளுப்பாட்டு**

அரையர் சேவையில் பள்ளுப்பாட்டு என்று ஒருவகைப் பாடல்கள் பாடப்படுகின்றன.இப்பாடல்கள் பகல்பத்தின்போது அரையரால் இன்றளவும் இறைவன் முன் பாடப்படுகின்றன.தாளக்கருவியாக மிருதங்கத்தைப் பயன்படுத்துவர்.பகல்பத்தின்போது இறைவனையும் ஆழ்வார்களையும் படிகளின் வழியாக பகல்பத்து மண்டபத்திற்கு அழைத்துவருவர்.பின்னர் மண்டபத்திலிருந்து கருவறைக்கு படிகளில் ஏற்றுவர்.இதற்கு படியேற்றம் என்று பெயர்.இந்நிகழ்ச்சியின்போது பள்ளுப்பாட்டு பாடப்பெறும்.**”சுழுமுனை நாடியில் குண்டலினி சக்தி புகுந்து ஆறு ஆதாரங்களையும் கடந்து சஹஸ்கார சக்கரம் (ஆயிரம் இதழ் தாமரை) போய்ச் சேர்வதை இப் படியேற்ற தத்துவம் குறிக்கிறது என்று தத்துவ விளக்கம் கூறுவர்” (அரையர்சேவை-ப.எண்-66)**

சுழுமுனை நாடி என்பது ஞானத்தை தருவதாகும் இதை கவன நாடி, மைய நாடி என்றும் கூறுவர்.இதனுடைய பிறப்பிடம் நெற்றிப்பொட்டு.ஆன்மாவானது கருவினுள் சஹஸ்கார சக்கரத்தின் வழியாகவே நுழையும்.இறக்கும்போதும் ஆன்மா இதன் வழியாகவே வெளியேறும்.அவரவர் கர்ம வினைகளின் அடிப்படையில் ஒருநாள் தானாகவே குண்டலினி சக்தி சஹஸ்காரத்தினுள் சென்று அதைத் திறக்கும்.இந்த நிகழ்வே முக்தி நிலை எனப்படும்.இந்த முக்தி நிலையை அடைந்தவர்க்கு மீண்டும் பூலோகத்தில் பிறவிகள் கிடையாது.முக்தி அடைந்த ஆன்மா பூலோகத்தை விட்டு வெளியேறி அடுத்த லோகமான புவர் லோகத்திற்கு சென்று சக்தி உடலாக வாழும்.இம்முக்தி நிலையைஅருள்பவர்தான் பெருமாள்.

**”நீடுந் திகிரிப் படையாய்! உனைக்கற்று நின்னை என்றும்**

**பாடும் படித்தமிழ்ப் பாடல் தந்தாய்; பழ நான்மறை நூல்**

**தேடும் திரு அரங்கா! அடியேன் உயிர் சொல்லும் அந்நாள்**

**வீடும் தர இருந்தாய்; எனக்கு ஏது இனி வேண்டுவதே?" (திருவரங்கத்துமாலை பா.எண்- 110)**

என அடியவர்கள் இறைவனிடம் வேண்டி நிற்பது இம்முக்தி நிலையைத்தான் படியேற்றத்தின்போது மண்டபத்தின் மேல் ஏறியவுடன் சீர்பாதம் தாங்கிகள் (இறைவனை சுமப்பவர்) இறைவனை உயரத்தூக்கிக் காட்டுவர். அதைக் காண்பவர் பரமபதம் எனும் மேலான நிலையை அடையும் பேறுபெறுவர்.திருவரங்கம், ஸ்ரீவில்லிப்புத்தூர், ஆழ்வார் திருநகரி என்ற மூன்று இடங்களிலும் இச்சேவை இன்றளவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**பள்ளுப் பாடலின் அமைப்பு**

அரையரால் பாடப்படும் எளியவகைப் பாடல் பள்ளுப்பாடலாகும்.அரையர் ஒருவரால் பள்ளர் சேரியிலிருந்து கற்றுக்கொண்டு வரப்பட்டதாலும், இறைவன் உவந்து கேட்டதாலும் இன்றளவும் அரையர்கள் பாடிவருகின்றனர்.இன்றி அரையர்களால் பாடப்படும் பள்ளுப்பாடல்கள் மொத்தம் 13 ஆகும்.

**பொன் ஆனாய், பொழில் ஏழும் காவல் பூண்ட**

**புகழ் ஆனாய்! இகழ்வாய தொண்டனேன் நான்**

**……………………………………………………….**

**முன் ஆனாய்! பின் ஆனார் வணங்கும் சோதி**

**திருமுழிக்களத்து ஆனாய்! முதல் ஆனாயேல்!" ‘திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகம் பா.எண்- 10)**

என்ற திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டக பாசுரம் இப்பள்ளுப்பாடலுள் ஒன்றாகும். மற்ற பாடல்கள் பாடும் அரையர்கள் அபிநயம் செய்வதில்லை. ஆனால் இப்பாசுரத்திற்கு அபிநயிப்பார்கள்.

தமிழிலக்கிய வகைகளுள் ஒன்றான பள்ளு என்ற சிற்றிலக்கிய வகைக்கும் அரையர் பாடும் பள்ளுப்பாட்டிற்கும் தொடர்பு ஏதுமில்லை.பள்ளு இலக்கியம் நாட்டுப்புற நாடக இலக்கியமாகும்.அதில் நிகழ்ச்சி இயைபும், கதைத்தொடர்பும் உள்ளன.அரையர் பாடும் பள்ளுப்பாட்டில் அக்கூறு எதுவுமில்லை.

**“பள்ளும் பறையும் இசையிலே கேட்டருளும் படி திருவுள்ளம் பற்றி” (கோயிலொழுகு பாகம்**

***4- ப.எண்- 45)***

என கோயிலொழுகு இதற்கு சான்று பகர்கிறது.இறைவன் உயர்வு, தாழ்வு இன்றி அனைவரின் அன்பிற்கும் ஆட்படுவான் என்பதற்கு பேருதாரணம் இப்பள்ளுப்பாட்டு.

**இராப்பத்து**

மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசிக்கு முதல் பத்து நாட்களை அடுத்து, அடுத்த பத்து நாட்கள் கொண்டாடப்படுவது இராப்பத்து அல்லது திருவாய்மொழித் திருநாள் எனவும் அழைக்கப்படுகிறது. தசமிக்கு மறுநாளான வளர்பிறையின் ஏகாதசி திதி முதல் தேய்பிறையின் பஞ்சமி திதி முடிய பத்து நாள் விழா நடக்கும். நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழியில் உள்ள ஆயிரம் பாசுரம் இசைக்கப்படும். இதற்கு மறுநாளான இருபத்தியோராவது நாள் ஏனைய ஆழ்வார்கள் இயற்றிய முதல், இரண்டு, மூன்று, நான்காம் திருவந்தாதிகள், திருவிருத்தம், திரு ஆசிரியம், பெரிய திருவந்தாதி, ஆகியவை இசைக்கப்படுகின்றன.

மேலும்,

**”முள்ளிச் செழுமலரோ தாரான் முளைமதியம்**

**கொள்ளிக்கென்னுள்ளம் கொதியாமே — வள்ளல்**

**திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி**

**மருவாளன் தந்தான் மடல்” *(சிறிய திருமடல் பா.எண் 1)***

என பிள்ளை திருநறையூர் அரையரால் போற்றப்படும் சிறிய திருமடல்,

***"மன்னிய பல்பொறிசேர் ஆயிரவாய் வாளரவின்***

***சென்னி மணிக்குடுமித் தெய்வச் சுடர்நடுவுள்***

***மன்னிய நாகத் தணை மேலோர் மாமலைபோல்***

***மின்னும் மணிமகர குண்டலங்கள் வில்வீச" (பெரிய திருமடல் பா.எண் 1)***

*எனத் தொடங்கும் திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமடல் முழுவதும் வைகுந்த வழிபாட்டின் போது இசைக்கப்படும்.*

***"பூமன்னு மாது பொருந்திய மார்பன்***

***புகழ் மல்லிந்த பாமன்னு மாறன் அடிபணிந்து உய்ந்தவன்***

***பல்கலையோர் தாம்மன்னவந்த இராமானுசன்***

***சரணாரவிந்தம் நாம் மன்னி வாழ நெஞ்சே சொல்லுவோம் அவன் நாமங்களே"***

***(இராமானுச நூற்றந்தாதி பா.எண் 1)***

*இராமனுச நூற்றந்தாதி முதலியவை அடங்கிய இயற்பா ஆயரமும் இசைக்கப்படும். இறைவனை இசையுடன் பாடி பரவசமுற்ற அடியவர்களின் நிலையை இதன் மூலம் நம்மால் அறிந்துகொள்ளமுடிகிறது.*

**பக்தி உலாவுதல்**

*இராப்பத்து நாட்களில் இறைவன் நாள்தோறும் கோயிலுக்கு வெளியே உள்ள ஒரு கொட்டகையில் சிறிய உற்சவரை எழச்செய்து முன்னும் பின்னுமாக தூக்கிச் செல்வர்.இதற்கு 'பத்தி உலாவுதல்' என்று பெயர்.மேலும் நம்மாழ்வாரின் திருமுடியில் இறைவனின் திருமேனியை அர்ச்சகர் தூக்கி வந்து வைப்பர்.இது 'திருமுடி சேவை' எனப்படும்.நாள்தோறும் இவை நிகழ்ந்த பின்னரே இராப்பத்து மண்டபத்திற்கு இறைவனும் நம்மாழ்வாரும் எழுந்தருள்வார்.அதன்பின் அன்றைய பாசுரத்தை இசையுடன் பாடி அபிநயிப்பார்.இராப்பத்து மண்டபத்தில் அரையர் பாடுவதையும், அபிநயிப்பதையும் அனைவரும் கேட்கலாம்.பார்க்கலாம்.அதன் பின் அரையர்*

கூறும் திருவாய்மொழி உரையை அனைவரும் கேட்க இயலாது.திரைக் கட்டிக்கொண்டு அரையர் உரை கூறுவர்.இதன் காரணத்தை பின்வருமாறுக் கூறுவர்.

திருவாய்மொழி பகவத விஷயம் ஆனபடியால் ஆசிரியரிடம் மாணவன் கேட்கும் முறையில் — ஓராண வழியில் — அதை கேட்க வேண்டும் என்பதால் இந்த நடைமுறை உள்ளது.இதனை இறைவனும் கோஷ்டியில் அமரும் வைணவர்களும் காண்பர்.

பிரணய கலகம் நிகழ்ச்சியும் சாற்று முறையும் இவ்விழாவின் இன்றியமையாப் பகுதிகள் .இதனை அனைவரும் காண்பர்.நம்மாழ்வாரின் திருவாய்மொழி உயிரின் பயணம் என்பர். நம்மாழ்வார் பரமபதம் எழுந்தருள்வதும், அங்கு அவர் பெறும் இறையுடன் இணையும் அனுபவமும் இராப்பத்தின் அடிப்படைகள் எனவே சாற்றுமுறையும், அதற்கு அடிப்படையான பிரணயகலகமும் இராப்பத்தின் மையமாகிறது.

இராப்பத்தின் பத்தாம் நாள் அன்று இரவு நிகழும் நிகழ்ச்சி பிரணயகலகமாகும். இந்நிகழ்வின்போது இறைவன் இறைவிக்கு இடையில் ஏற்படும் அன்பான சிறு ஊடலை நம்மாழ்வார் தீர்த்து வைப்பார்.

**”மின்னொத்த நுண் இடையாளைக் கொண்டு**
**வீங்கு இருள்வாய் எந்தன் வீதி ஊடே**
**பொன் ஒத்த வாடை குக்கூடலிட்டு**
**போகின்ற போது நான் கண்டு நின்றேன்**
**என்னுக்கு அவளை விட்டு இங்கு வந்தாய்**
**இன்னும் அங்கே நட நம்பி நீயே” (குலசேகராழ்வாரின் ஆறாம் திருமொழி — பா.எண் 2)**

வீதியுலா சென்று நெடுநேரம் கழித்து வீடு திரும்பும் இறைவனிடம் நாச்சியார் இவ்வாறு ஊடி கதவடைக்கிறாள்.நம்மாழ்வார் பாசுரங்களை இசைத்தப்படி அரையர் ஊடலை தணித்து வைக்கும் செயலை அபிநயித்துக்காட்டுவர்.

நம்மாழ்வார் பதினோராம் நாளன்று உடலுடன் பரமபதம் சென்று இறையுடன் ஒன்றுபட்டு, பின் இறைவனிடம் பரமபதம் வேண்டாம்.மண்ணுலக வாழ்வே வேண்டும் என்று கூறி மீண்டும் பூமிக்கு வருதல் ஆகிய கூறுகளை உள்ளடக்கியது சாற்று முறை நிகழ்ச்சியாகும்.

**முடிவுரை**

மனிதன் மனதில் தோன்றிய அச்ச உணர்வும், குற்ற உணர்வும் வழிபாட்டு முறையைத் தோற்றுவித்தன எனலாம். மனித சமூகத்தின் தொன்மைத் தொழிலாகவும், நாகரிகத்தின் தொடக்கமாகவும் கருதப்படுவது வேட்டையாடுதல்.வேட்டையாடி உணவு உண்ட மனிதனின் இருப்பிடம் காடு.காடும் காடு சார்ந்த இடத்திற்கு இறைவனாக விளங்குபவன் திருமால் என்பதை தொல்காப்பியரால் அறியலாம்.இதன் மூலம் திருமால் வழிபாடு மிகத் தொன்மையானது என்பதையும், இச் சமயத்தின் முக்கிய நிகழ்வாக அமையும் பரபத வழிபாட்டின் சடங்கு முறைப் பற்றியும் அறியமுடிகின்றது.

**துணை நின்ற நூல்கள்**

1.இராசமாணிக்கனார். மா டாக்டர் தமிழக வரலாறும் பண்பாடும் சாரதா பதிப்பகம் சென்னை — 600 014. முதற்பதிப்பு- ஆகஸ்டு 2011.

2. கமலக்கண்ணன். இரா.வ. முனைவர் (உ.ஆ),அஷ்டப்பிரபந்தம் மூலமும் உரையும் வர்த்தமாணன் பதிப்பகம், தியாகராயநகர், சென்னை — 17, முதற்பதிப்பு — 1992.

3. கதிர்முருகு டாக்டர் (உ.ஆ),திருமங்கையாழ்வார் அருளிய சிறிய திருமடல் பெரிய திருமடல்,சாரதா பதிப்பகம், சென்னை — 600 014, முதற்பதிப்பு- டிசம்பர் 2009.

4. காவ்யா சண்முகசுந்தரம் பேரா. (தொகுப்பாசிரியர்), காவ்யா பதிப்பகம் 14, முதல் குறுக்குத்தெரு சென்னை — 600024.

5. சக்திவேல். சு டாக்டர், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை ,சென்னை — 600108, முதற்பதிப்பு- 1983

6. வேங்கடராமன். சு டாக்டர், அரையர் சேவை, தமிழ்ப்புத்தகாலயம், 58,டி.பி.கோயில் தெரு. திருவல்லிக்கேணி, சென்னை- 800005. முதற்பதிப்பு செப்டம்பர் ,1985.

7.ஜெகத்ரட்சகன் . டாக்டர்( நயவுரை), நாலாயிரதிவ்யப் பிரபந்தம், ஆழ்வார்கள் ஆய்வு மையம், நந்தப்பாக்கம் — குன்றத்தூர் வழி, சென்னை — 600069.

8.ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பெரியதிருமொழி ஹைதராபாத் — 500 045 முதற்பதிப்பு — 1992.

9.ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாச்சார்யர் வெளியீடு, ஸ்ரீரங்கநாச்சியார் அச்சகம் 214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம். திருச்சி — 620 006. முதற் பதிப்பு — 21.03.2008

## REFERENCE BOOKS

1. Dr M.Rasamanikanar , Tamilaga Varalarum Panpadum, Saratha Pathippagam, Chennai-14 First Edition — 2011.
2. Dr R.Kamalakannan Ashtaprabandham, moolamum uraium, Varthamanan Pathippagam, 40, Thiyagarayanagar, Chennai-17 First Edition — 1992.
3. Dr Kathirmurugu Thirumangai aazlwar aruliya siriya thirumadal, periya thirumadal, saratha pathippagam, Chennai-14 First Edition — 2009
4. Kaviya Shanmuga sundaram.kaviya pathippagam, 14, First Street, Chennai-600024
5. Dr Sakthivel Nattupura eyal aaivu, Manivasagar Pathippagam, 31, Singar Street Pari munai, Chennai — 108, First Edition — 1983.
6. Dr S.Venkadaraman Arayar Sevai Tamil Bushthagalayam,T.B.kovil Thiruvellikeni Chennai — 05, First Edition — 1985.
7. Dr Jegathratchagan Nalayira Dhivya Brabandam, Azhwar aaivu maiyam, Nandhapakkam, kundrathoor vazhi Chennai — 69.
8. Sri Vaishava sri Periya thirumozhi Hyderabad — 45 First Edition — 1992.
9. Sri Vaishava sri A.Krishnamachariyar Veliedu, Srirenga naachiyar assagam 214, keela uthraveethi, Srirangam Trichy- 06 First Edition — 2008.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com